www.padippakam.com



# சிங்கள இனத்தின் தோற்றத்திற்கான அடிப்படை

9


## காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை...




### வரலாற்றுத் தொடர்

அனுராதபுர அரசைப் பற்றியும் அதற்கு அப்பாலிருந்த உருகுணை (தென்னிலங்கை) அரசுகளைப் பற்றியும் விலாவாரியாகக் குறிப்பிடும் மகாவம்சம் அனுராதபுரத்திற்கு வடக்கே உத்தரப் பிரதேசத்திலும் குடாநாட்டிலும் இருந்த அரசுகள் பற்றியோ அங்கு வசித்த மக்களைப் பற்றியோ எதுவும் குறிப்பிடவில்லை. நாக தீபத்தில் இருந்த இரண்டு நாக இளவரசர்களுக்கிடையில் உருவான சிம்மாசனத் தகராறை தீர்க்க புத்தபகவான் இலங்கைக்கு வந்தார் என்று மட்டுமே குறிப்பிடும் மகாவம்சம், அதற்கு மேல் அந்த அரசுகள் பற்றி எதுவுமே குறிப்பிடவில்லை. மாறாக மகாவம்சத்திற்கு பின்னால் வந்த சூளவம்சம் முதலான நூல்களில் உத்தரப்பிரதேசம் பற்றியும் அங்கிருந்து அனுராதபுரத்தை நோக்கி மேற்கொள்ளப்பட்ட படையெடுப்புக்கள் பற்றியும் குறிப்புக்கள் காணப்படுகின்றன.

உண்மையில் அனுராதபுரம் பௌத்த இராஜதானியாக விளங்கிய காலத்தில் அதற்கு இணையான விதத்தில் வடக்கே குடாநாட்டில் கதிரமலையும் (கந்தரோடை) பெரும் செல்வாக்குப் பெற்ற அரசாக இருந்ததாக



கதிரமலை இராஜதானிப் பகுதியும் பௌத்த சின்னங்களும்

அறிய முடிகின்றது. அக் காலத்தில் இலங்கையின் பிரசித்தி பெற்ற துறைமுகமான மாதோட்டம் கதிரமலை அரசின் கீழ் இருந்தாலும் அனுராதபுரத்தை விட கதிரமலையே மிகப் பெரிய தொடர்பு மையமாகவும் கேந்திர நிலையமாகவும் இருந்தது. அசோகனது ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட பௌத்த மதம் அசோகனது மகன் மகிந்தனால் காவிரிப்பூம் பட்டணத்தில் கட்டப்பட்ட இந்திர விகாரையிலிருந்து கதிரமலையூடாக பரவியதாகவும், இலங்கையின் முதலாவது பௌத்த மன்னனான தேவநம்பியதீசன் கதிரமலையில் பாசினா விகாரை என்ற விகாரையைக் கட்டியதாகவும் சொல்லப்படுகின்றது.(1)

புத்தமதத்திற்குள் பிளவு ஏற்பட்டு தேரவாதப் பிரிவினரும் மகாயானப் பிரிவினரும் ஒருவரை ஒருவர் அழிக்குமளவுக்கு நிலைமை மோசமடையும்வரை அநுராதபுர அரசுக்கும் கதிரமலை அரசுக்கும் பெரிய முரண்பாடுகள் இருந்ததாகத் தெரியவில்லை. தொடக்க காலத்தில் பிளவுபடாத தேரவாதப் பௌத்தம் இரண்டு அரசுகளிலும் மதங்களாக இருந்தது. மொழி ரீதியாகவும் இரண்டு அரசைச் சேர்ந்த மக்களும் தமிழ் மொழி பேசுபவர்களாகவே இருந்தனர். திருமண உறவு முறைகளில் கூட இரண்டு அரச குடும்பத்தினரும் பரஸ்பரம் உறவினர்களாகவும் இருந்ததாகச் சொல்லப்படுகின்றது. தமிழில் உருவான முதல் பௌத்த காப்பியமான மணிமேகலை தேரவாதப் பௌத்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டது என்றே சொல்லப்படுகின்றது(2). தமிழகத்திலிருந்து இலங்கைக்கு வந்து பௌத்தப் பிரச்சாரம் செய்ததோடு சிவனொளிபாதத்திற்கும் யாத்திரை மேற்கொண்டதாகச் சொல்லப்படும் அறவணை அடிகள் தேரவாதப் பிரிவைச் சேர்ந்தவர் என்றே கருதப்படுகின்றது(3).

## தேரவாதப் பௌத்தம்

பிராமணிய ஆதிக்கத்திற்கு எதிராக கௌதம புத்தர் பௌத்த கோட்பாடுகளை முன் வைத்தபோது பிராமணர்களுக்கு உயர்வு வழங்குவதை முற்றாக நிராகரித்தார். பிறப்பால் உயர்வு தாழ்வு ஏற்படுவதில்லை எனவும், மனிதர்களின் செயல்களே அவர்களின் உயர்வு தாழ்வுகளை நிர்ணயிக்கிறது எனவும் தேவனுக்கு செலுத்துகிற பிரார்த்தனைகளும் வேள்விகளும் மனித குலத்தின் துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் ஒரு மாற்றாக ஆக முடியாது என்றும் போதித்தார். சரியாக முறையில் பிறப்பைப் பற்றியும் அதிலிருந்து விடுதலை அடைவதைப் பற்றியும் அதற்கான வழியையும் அவர் போதித்தார். ஏறக்குறைய தொடக்க கால தேரவாதம் தனிமனிதன் உய்வடைவதற்கான வழியைச் சொல்வதாகவே இருந்தது. புத்தரை அவர்கள் தெய்வமாகக் காணவில்லை மனிதராகவும் குருவாகவுமே அவர்கள் கண்டார்கள்.(4) தீயனவற்றை விலக்கி, நல்லனவற்றைக் கடைப்பிடித்து மனத்தை தூய்மையானதாகச் செய்யவேண்டும். இதற்கு சீலம், சமாதி, பிரக்ஞை என்ற முறைகளைப் பின்பற்ற வேண்டும். இல்லறத்தாருக்கு பஞ்சசீலமும் இல்லறத்தில் சிறந்தோருக்கு அட்ட சீலமும், துறவிகளுக்கு தச (10) சீலமும் ஒழுக்க நெறிகளாக விதிக்கப்பட்டன.

புலன்களால் உண்டாகும் பற்றுக்கள் துன்பம் தருவன. இதை அறிவது முதல் உண்மை. துன்பம் தருவன. விளைவதற்கு காரணமாக இருப்பனவற்றை உணர்வது இரண்டாவது உண்மை. இவை இரண்டிற்கும் எது காரணம் என்பதை அறிந்து அதனின்றும் விடுதலையடைவதற்குரிய வழியை அறிவது மூன்றாவது • உண்மை. துன்பத்தை போக்கி துன்பமற்ற நிர்வாண நிலையை அடைவதற்குரிய வழியை பின்பற்றுவது. நோய் நீக்கும் வழி. இதுவே வாழ்க்கைமுறை பற்றி தேரவாத பௌத்தர் கடைப்பிடிக்கும் கோட்பாடாகும்.

## மகாயானம்

தொடக்க காலத் தேரவாத பௌத்தம் பிராமணியத்துக்கு எதிரான ஒரு நாத்தீக இயக்கமாகவே இருந்தது. தனிமனிதன் சம்சார பந்தத்தைக் கடந்து விடுதலை பெறுவதற்கான ஒரு துறவு மார்க்கந்தான் அதில் இருந்தது. அசோகன் காலத்தில் இது தமிழ் நாட்டுக்கு வந்தபின் நிலைமை மாறத் தொடங்கியது. தேரவாதப் பிரிவு புத்தரை மனிதராகவும், குருவாகவும் மட்டுமே பார்ப்பதற்கு மாறாக அவரை அவதார புருஷராகவும், மனிதர்களுடைய துயர் கண்டு சகிக்காது அவர்களது வாழ்க்கையிலே புகுந்து அவர்களது துன்பங்களைத் துடைத்து நல்வழி காட்டுபவராகவும் சித்தரிக்கும் தத்துவப்போக்கு உருவாகியது. தனிமனித ஈடேற்றத்திற்கு பாடுபடுவது என்ற இந்தத் தேரவாதப் போக்கை கீழான நிலை என நிராகரித்து எல்லோரும் உய்யவேண்டும் என்ற இலட்சியமும், எல்லோரும் பயனடையச் செய்ய வேண்டும் என்ற மனப்பான்மையும் அதாவது மகாயான நிலை (மேலான நிலை) பௌத்தர்களுக்கு இருக்க வேண்டும் என்ற தத்துவப் போக்கு உருவாக்கப்பட்டது. இதுவே மகாயானப் பிரிவு என்று அழைக்கப்பட்டது. தென்னகத்தைச் சேர்ந்த நாகார்ச்சுணரால் உருவாக்கப்பட்ட இந்தப் பிரிவு திக்நாகர், தருமபாலர், போதி தருமர், புத்த கோசர், ஜோதிபாலர் முதலான தமிழ் பௌத்த பிக்குகளால் தத்துவார்த்த ரீதியாக வளர்க்கப்பட்டது. 5 மகாயானப் பிரிவினர் கௌதமபுத்தர் இரண்டு உண்மைகளைப் போதித்ததாகவும் ஒரு உண்மை மந்த அறிவு படைத்தவர்களுக்கும் மற்றய உண்மை, கூர்மையான அறிவு படைத்தவர்களுக்கும் சொல்லப்பட்டதாகவும் இதற்கு ஆதாரமாக புத்தர் சொன்ன உவமைக் கதையை அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

ஒரு சமயம் ஒரு வீடு எரிந்து கொண்டிருந்தது. அந்த வீட்டுக்கு சொந்தக்காரனான தந்தை வீட்டுக்கு வெளியே இருந்தான். குழந்தைகள் வீட்டுக்கு உள்ளே இருந்தார்கள். தந்தை அவர்களைப் பார்த்து "தீ உங்களை பொசுக்கிவிடும் இந்த ஜன்னல் வழியாக வெளியே ஓடிவாருங்கள்" என்று கத்தினான். அவர்கள் விளையாட்டில் மும்முரமாக இருந்ததால் தந்தையின் பேச்சைக் கேட்கவில்லை. உடனே அவர் அவர்களின் கவனத்தை ஈர்க்க இங்கே வாருங்கள். மூன்று தேர்கள் இருக்கின்றன விளையாடலாம் என்றான். அவர்கள் வெளியே வந்துவிட்டார்கள். அதன் பின் எரிந்த வீட்டுக்குள் இருந்தால் என்ன நடக்கும் என்பதை எரிந்த பொருட்களைக் காட்டி விளக்கி வெளியே வரவேண்டிய அவசியத்தையும் சொன்னான். பின்னர் அவர்கள் வெளியே வந்தது எப்படிச் சரியானது என்பதைத் தெரிந்து கொண்டார்கள்.

தேரை விளையாடக் கொடுத்தது போலத்தான் முன்னேறாதவர்களுக்கு ஒரு பாதையையும் பக்குவம் பெற்றவர்களுக்கு மேலான பாதையையும் புத்தர் வகுத்துள்ளார். இரண்டும் ஒரே பாதைதான் முதல் பாதையில் சொல்லாமல் இரண்டாவது பாதைக்கு வந்து விடலாம். ஆனால் முதல் பாதையில் செல்பவர்கள் இரண்டாவது பாதைக்கு வந்துதான் ஆகவேண்டும். அதாவது ஹீனாயன (கீழ் பாதையில்) பாதையில் செல்லும் தேரவாதிகள் மகாயான பாதையில் வந்தே ஆக வேண்டுமென இவர்கள் குறிப்பிடுகின்றனர்.

தென்னாட்டை மையமாகக் கொண்டு இந்தியாவில் பௌத்த மதத்தில் ஏற்பட்ட பிளவு இலங்கையையும் பாதித்தது. கி.பி 270 - 300ம் ஆண்டில் அனுராதபுரத்தை ஆண்ட மகாசேனன் காலத்தில் சோழநாட்டிலிருந்து வந்த சங்கமித்தர் என்ற பிக்கு மகாயானக் கருத்துக்களைப் பரப்பி அரசனை மதம்மாறச் செய்தபோது அவன் தேரவாதப் பிரிவின் மைய தானமான மகாவிகாரையை இடித்துவிட்டு அபயகிரி விகாரையை கட்டியதாகச் மகாவம்சம் சொல்கிறது. இந்த நிகழ்வே தேரவாதப் பிரிவு தமிழர்கள் கடைப்பிடித்த மகாயானப் பிரிவிலிருந்து தங்களை தனிமைப் படுத்திக் கொண்டு, பாளி மொழியின் அடிப்படையில் தங்களை தனி ஒரு இனமாக உருபெறச் செய்ய முயலவும் தமிழர் விரோதப் போக்கைக் கடைப்பிடிக்கவும் காரணமாக இருந்தது.

(1) முதலியார் இராஜநாயகம் - யாழ்ப்பாணச் சரித்திரம்
(2) வையாபுரிப்பிள்ளை ஆரியகாலம்
(3) பேராசிரியர் பத்மனாதன் - Historical Writngs in Medieval Srilanka.
(4) பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை தமிழர் சமய வரலாறு.
(5) நா. வானமாமலை - தமிழர் பண்பாடும் தத்துவமும்

- நக்கீரன்